**IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,**

**KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL**

**C.C. No. 3/2025**

**Deposition of P.W. 1**

| | | |
|---|---|---|
| **Name** | : | **Thiru. Sathishkumar** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |
| **Dated** | : | **19.08.2025** |

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் சமூக வனச்சரகத்தில் வனவராக பணியாற்றுகிறேன். வழக்கு சம்பவத்தின்போது குலசேகரம் வனச்சரகத்தில், பேச்சிப்பாறை பிரிவு வனவராக பணியாற்றிவந்தேன். ஆஜர் 2வது எதிரியை எனக்கு தெரியும். 1வது எதிரியையும் தெரியும். 24.08.2017 அன்று மாலை சுமார் 04.00 மணியளவில் நானும், தெற்கு பீட் வனக்காப்பாளரும் தணிக்கை

செய்தபோது குலசேகரம் தெற்கு பீட் தும்பக்கோடு கிராம பகுதி புல எண். 529 ல் தனியார் காடுகளுக்கு உட்பட்ட பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அனுமதி இல்லாமல் அவ்விடத்தில் இருந்த சுமார் 103 பல ஜாதி மரங்களை வெட்டி அந்த இடத்திலேயே சிறு சிறு துண்டுகளாக்கி நெருப்பிலிட்டு அழித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட வன அலுவலர் அவர்களின் அனுமதி இல்லாமல் மேற்படி செயல் தனியார் பாதுகாப்பு காடுகளுக்கு உட்பட்ட சட்டத்திற்கு எதிரானதாகும். இது தொடர்பாக என்னால் குத்திமோட்டு பட்டியல் அளவீடு செய்து, சிவப்பு பெயிண்டால் குத்திமோட்டின் எண்ணிட்டு அளவுகள் எடுக்கப்பட்டு, குத்திமோட்டு பட்டியலை நானும், மேற்படி வனக்காப்பாளரும் சேர்ந்து எடுத்தோம். மேற்படி குற்றத்திற்குரிய எச்.நமூனா சம்பவ இடத்திலேயே என்னால் தயார் செய்யப்பட்டது. மேற்படி குற்றத்திற்கான குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சம்பந்தப்பட்ட எதிரிகளிடம் தெற்கு பீட் வனக்காப்பாளர் திரு. முருகனால் என் முன்னிலையில் பெறப்பட்டது. குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் தனித்தனியாக பெறப்பட்டது- மேலும் சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் ஸ்தல மகசர் சம்பவ இடத்திலும் மற்றும் வனக்குற்ற அறிக்கை என்னால் தயார் செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் வனச்சரக அலுவலரை சந்தித்து மேற்படி வனக்குற்ற அறிக்கையை அன்றைய

தினமே சமர்ப்பிக்கப்பட்டது. வனச்சரக அலுவலரும் அன்றைய தினமே சம்பவ இடத்தில் குத்திமோட்டு பட்டியலை சரிபார்த்து, பின்னர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மேல்நடவடிக்கைக்காக வழக்கு தொடர்வதற்காக தனியார் வனப்பாதுகாப்பு சட்டம் என்பதால், மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் பெற வேண்டும் என்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டார். மேலும், அதே இடத்தில் 02.09.2017 அன்று திருநெல்வேலி வனப்பாதுகாப்பு படை சம்பவ இடத்தில் தணிக்கை செய்தார்கள். அப்போது மணல் மற்றும் குப்பைகளால் மூடிக்கிடந்த மேலும் 57 குத்திமோட்டு பட்டியல் அவர்களால் எடுக்கப்பட்டது. ஏற்கெனவே வழக்கில் எடுக்கப்பட்ட குத்திமோட்டு பட்டியலுடன் இவையும் சேர்க்கப்பட்டது. இது தொடர்பாக வழக்கு தொடர்வதற்கு வனச்சரக அலுவலர் மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் வேண்டி பரிந்துரைக்கடிதம் அனுப்பினார். என்னிடம் காண்பிக்கப்படும் எச்.நமூனா, ஸ்தல மகசர், குத்திமோட்டு அறிக்கை, எதிரிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் வனக்குற்ற அறிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(எச்.நமூனா அ.சா.ஆ. 1 ஆகவும், ஸ்தல மகசர் அ.சா.ஆ. 2 ஆகவும், 103 மரங்களின் குத்திமோட்டு அறிக்கை அ.சா.ஆ. 3 ஆகவும், வனக்குற்ற அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**